முருகப்பெருமான் துணை

**மகான் வேதாந்தச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.09.2023**, திங்கட்கிழமை

1. தருமனே தன்னிகர் இல்லாத
   தலைவனே ஆறுமுக அரங்கனே
   பெருமைமிக்க தொண்டர் படைகளை
   பேருலகமெங்கும் படைத்து அருளும்
2. அருளும் தேசிகனே உன் பெருமை கூறி
   அகிலமதில் அறிவுரை ஆசி
   வரமென சோபகிருது யாளி திங்கள்
   வல்லமைபட மூவாறு திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 18 ம் நாள், 04.09.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் வேதாந்தச்சித்தர் யானும்
   வழங்குவேன் அரங்கன் ஞானசபை
   சோரமின்றி பலம்தனை அடைய
   சூட்சுமப் பிறவித் தொடர்பு வழி
4. வழிதனில் அரங்கன் சபைக்கு
   வருகை தருகின்ற மக்களெல்லாம்
   பழிபாவத் துன்பகதி விலகி
   பரோபகாரமிக்க தயவாளர்களாக
5. ஆகவே சக்திநிலை அடைவர்
   அனுகி குடிலின் அருளமுதை
   வகைபட உண்ட மக்களுக்கு
   வஞ்சனை சூழ்ச்சி எண்ணம் விலகி
6. விலகி தானென்ற சுயநலமும்
   விரைந்தோடி சமதர்ம நிலை
   பழக்கவழக்கம் ஆகி இனிதே
   பண்பாளர்களாக மாற்றம் அடைவர்

7. அடையவே அரங்கன் தரும
அளவிலா மகத்துவம் கண்டு
தடையற தானும் இயன்ற
தருமம் செய்யும் மனபலம் கூடி
8. கூடியே அரங்கன் ஆசிபட
குருதீட்சை ஞான பலமுற
தேடியே தேசம் எங்கிலும்
தேசமெங்கிலும் பல கிளைகள்
9. கிளைகள் தரும சாலைகளாக
குருவருள்பட துவங்கி ஆற்றல்
வேலவன் சக்தியாக தருமமாக
வெளிப்பட்டு தருமம் வளர்த்திட
10. வளர்த்திட அரங்கன் படைகள்
வளர்ந்தோங்கி ஞானிகள் ஆசிபட
தளர்விலா ஞான சமூகம்
தரணி காத்திடும் உலகமாற்றம்
11. மாற்றம் அரங்கன் நோக்கமாக
மண்ணுலகம் கண்டடையும்
ஆற்றல்பட ஞான ஆட்சியாகமலரும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—